**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.130 /2019**

**Deposition of P.W. 12**

**Name** : திரு**.** அருள்பிரகாஷ்

**S/o, D/o, W/o** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of**

**Dated:19.11.2025**

**Accused Present.**

முதல் விசாரணை-

நான் தற்போது கோட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 15.01.2018ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துதாஸ் என்பவர் பதிவு செய்து காவல் ஆய்வாளர்கள் திரு. ரவீந்திரன் மற்றும் திருமதி.சிவசங்கரி அவர்களால் முதல் விசாரணை செய்யப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.12/2018 பிரிவுகள் 341, 294(பி), 307 இ.த.ச மற்றும் பிரிவு 3 (1) பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்ட படியான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 23.02.2019ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு காயச்சான்று

வழங்கிய மருத்துவர் திரு. தங்கவேல் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினம் வழக்கின் சட்ட பிரிவினை பிரிவு 3(1) பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டப்படியான பிரிவை நீக்கி பிரிவு 427, இ.த.ச படி சட்டம் மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன் அந்தஅறிக்கை அ.சா.ஆ.13. அன்றைய தினமே இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பின்னர் 28.04.2019ம் தேதியன்று வழக்கின் எதிரியின் இருப்பிட முகவரியை திருத்தம் செய்து வழக்கு கோப்பில் சேர்ப்பதற்கு விண்ணப்பம் கொடுத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயம்பட்டவர் மருத்துவரிடத்தில் சம்பவம் அவரது வீட்டின் அருகே நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 14.01.2018ம் தேதி வழக்கின் எதிரி சந்திரசேகரை தாக்கவில்லை என்றாலும், கொற்றிக்கோடு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் மற்றும் இரண்டு காவலர்கள் காவல்நிலையம் அழைத்து சென்று அவரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எதிரியை கடுமையாக தாக்கி அவரது கண் அருகிலும், தலையிலும், கழுத்திலும் வீக்க காயம் ஏற்படுத்தி அவர் காவல்நிலையத்தில் இறந்து விடுவார் என பயந்து அவரை 09.45 மணிக்கு தக்கலை மருத்துவமனைக்கு அனுப்பி 1வது சாட்சியின் மூலம் அவரே ஏற்படுத்திய பொய் காயத்தை வைத்து, எதிரியின் மீது

ஏற்கனவே போடப்பட்ட வழக்குகளில் இருந்த சாட்சிகளை வைத்து போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எனக்கு முன்னர் புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர்கள் செய்த தவறான புலன் விசாரணையின் அடிப்படையில் தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.